**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 46/2020**

**பி. வா.சா. 1 – முருகன்** (மண்டல துணை வட்டாட்சியர்)

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 27.11.2025.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் வழக்கு பட்டிகை சொத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் எப்போது சென்று வழக்கு பட்டிகை சொத்தை பார்த்தேன் என்றால் அக்டோபர் மாதம். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண்.273/17 ன் நீளம், அகலம் என்ன என்றால் நீளம் அகலம் தெரியாது பரப்பளவு 58.5 ஏர் என்பது தெரியும். நீளம் மற்றும் அகலம் தெரிந்தால் தான் 58.5 ஏர் என்று நிர்ணயிக்க முடியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணம் சர்வே எண்.273 க்கான ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் சர்வே எண்.273/17 க்கு எந்தெந்த இடத்தில் எவ்வளவு வீதி என்று துலங்காது என்றால் சரிதான். சர்வே எண்.273 க்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் தெரியாது உட்பிரிவு செய்யப்பட்டது ஆகையால் சர்வே எண்.273 க்கான ஆவணம் இல்லை. மேற்படி உட்பிரிவு செய்யப்பட்டதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பழைய சர்வே எண். 3208 ன் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் பழைய சர்வே எண். 3208 ன் பட்டா யார் பெயரில் இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் அரசிடம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.3208 எந்த ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டு 3208/1 மற்றும் 3208/2 என்று பிரிந்தது என்றால் அதற்கான ஆவணங்கள் தற்போது கொண்டுவரவில்லை. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா

என்றால் தாக்கல் செய்யலாம். வழக்கில் வாதிகள் தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் அனைத்து ஆவணங்களையும் பார்க்கவில்லை. அரசு துறையில் சொத்தின் உரிமையாளருக்கு தான் பட்டா வழங்குவார்கள் என்றால் சரிதான். உரிமையாளர் இல்லாத நபரின் பெயரில் பட்டா வழங்கப்படமாட்டாது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 சர்வே எண்.273/17 க்கான பட்டா என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.9 ல் அரசு பெயர் இல்லை என்றால் சரிதான். அரசுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றால் அரசு பெயர் இருக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ல் சர்வே எண். 273/18 க்கான பட்டாவில் அரசு பெயர் இல்லை என்றால் சரிதான்.

வழக்கு தாக்கல் செய்யும் முன்பு வாதியால் வழக்கறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டது அதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை என்றால் அஞ்சலக ஒப்புதல் அட்டை ஆனால் வழக்கறிவிப்பிற்கானது என்பது குறித்து தெரியவில்லை. வா.சா.ஆ.11 வழக்கறிவிப்பு தாசில்தார் முகவரியில் தான் இருக்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 எனது அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பியிருக்கலாம். மேற்படி வழக்கறிவிப்பிற்கு பதிலறிவிப்பு அனுப்பியுள்ளோமா என்றால் தெரியவில்லை. வழக்கறிவிப்பு கிடைத்ததா என்றால் கிடைத்திருக்கலாம். பி.வா.சா.ஆ.2 ல் சர்வே எண்.273/17 அரசுக்கு பாத்தியப்பட்டதாக துலங்காது என்றால் சரிதான். SLR ஆவணம் உள்ளது மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் இல்லை. அ.வ.எண. 378/2005 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அவ்வழக்கின் வாதி வழக்கறிவிப்பு எங்களுக்கு அனுப்பியுள்ளார் அதனை நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

அ.வ.எண. 378/2005 வழக்கில் எதிருரை தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது

பற்றி தெரியவில்லை. ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அது குறித்து தெரியாது. மேற்படி அ.வ.எண. 378/2005 வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களோ அதற்கான பதில்கள் குறித்தோ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 7ம் பத்தியில் 1ம் பிரதிவாதி வழக்கறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு 28.2.2001 அன்று கொடுத்ததாகவும் அதில் "கோவில் டிரெஸ்டிகள் கோவில் நிலத்தை சுற்றி மண் அரிப்பை தடுப்பதற்காக சுவர் எழுப்பியதாக" குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் மேற்படி சுவர் எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 273/17 ல் 40 சதுர மீட்டரில் ஒரு பகுதி மேற்படி சுவர் கட்டப்பட்டுள்ளது. மேற்படி சுவர் கட்டியிருப்பதை எந்த தேதியில் நேரடியாக சென்று பார்த்து அளவீடு செய்தோம் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.3 ல் சிவப்பு நிறமாக குறிப்பிடப்பட்டுள்ளதை எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 18.09.2025. பி.வா.சா.ஆ.3 ல் சிவப்பு நிறமாக குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் 273/17 ன் அகலம் என்ன என்றால் இதனை பார்த்து சொல்ல முடியாது.

18.09.2025 அன்று அளப்பதற்கு முன்பாக நீதிமன்றத்திற்கோ, வழக்கறிஞருக்கோ அறிவிப்பு கொடுத்தோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.3 ல் ஆக்கிரமிப்பு இடத்தை கண்டுபிடிப்பதற்கு எந்த சர்வே எண்ணில் உள்ள கற்களில் ஆரம்பித்து அளந்தோம் என்ற விபரம் துலங்குமா என்றால் துலங்காது. நான் கூறியவாறு சர்வே எண். 273/17 மற்றும் 273/18 ன் எல்கை குறித்து நிர்ணயித்தால் தான் ஆக்கிரமிப்பை கண்டறிய முடியும் என்றால் சரிதான். சர்வே எண். 273/17 மற்றும் 273/18 ன் எல்கை நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியாததால் ஆக்கிரமிப்பு குறித்து என்னால் கூற முடியாது என்றால் பி.வா.சா.ஆ.3 ல் குறிப்பிட்டிருப்பதை வைத்தும் நில

அளவையர் மூலமும் தெரிந்து கொள்ளலாம். எல்கையை கண்டறியாமல் ஆக்கிரமிப்பு என்று கூற இயலாது என்றால் நிலஅளவையர் மூலம் தெரிந்து கொள்ளலாம். சர்வே எண். 273/17 ல் "……………………." என்று குறிப்பிடப்பட்டுள்ளது அது எதனை குறிக்கிறது எந்த ஆண்டு யாரால் போடப்பட்டது என்றால் தெரியாது. சர்வே எண். 273/17 ன் அருகில் அரசு நிலங்கள் இல்லை அனைத்தும் பட்டா நிலங்கள் என்றால் சரிதான்.

சர்வே எண். 273/18 யாருக்கெல்லாம் பாத்தியப்பட்டது என்ற விபரம் துலங்குமா என்றால் துலங்கும் "அ" பதிவேட்டின் படி பட்டா எண்.4666 ன் படி கிருஷ்ண நாகமணிக்கும் மற்றும் இதர நான்கு நபர்களுக்கு உரிமைப்பட்டது. சர்வே எண். 273/18 பட்டா எண்.6484 ன் படி பொன்னுசாமி நாடார் மகன் அனந்தகுட்டி நாடார் மற்றும் 18 நபர்கள். "அ" பதிவேட்டு எப்போது உருவாக்கப்பட்டது என்றால் அசல் "அ" பதிவேட்டினை பார்த்தால் தான் கூற இயலும். "அ" பதிவேட்டின் விபரங்கள் எந்த ஆவணத்தை பார்த்து உருவாக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை. சர்வே எண். 273 யை உட்பிரிவு செய்யப்பட்டதை வாதிக்கோ வாதியின் முன்னோர்களுக்கோ தெரியப்படுத்தியதற்கான ஆவணங்கள் கைவசம் உள்ளதா என்றால் தெரியாது. "அ" பதிவேடு எந்த ஆண்டு தேதிமுதல் நடைமுறைக்கு எடுத்துக்கொண்டோம் என்பது குறித்து விபரம் தெரியுமா என்றல் தெரியாது. சர்வே எண்.3208 என்பது சர்வே எண்.273/1, 2, 13, 14, 17, 18 Pt என்பது எந்த ஆண்டு மாதம் தேதியில் மாற்றப்பட்டது என்ற விபரம் குறித்து ஆவணங்களில் துலங்குமா என்றால் அசல் ஆவணங்களை பார்வையிட்டால் தெரியவரும். மேற்படி அசல் ஆவணங்கள் எங்கே உள்ளது என்றால் மாவட்ட நிலஅளவையரிடம். மேற்படி ஆவணங்களை பார்த்து நீதிமன்றத்தில் தெரிவிக்கலாமா என்றால் தெரிவிக்கலாம்.

சர்வே எண்.3208 க்கு வரைபடம் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ஆவணம்

அரசு ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் நிலஅளவு துறையிடம் இருந்தால் தாக்கல் செய்யலாம். பி.வா.சா.ஆ.2 ஆவணம் மேற்படி ஆவணங்கள் இருந்தால் தான் வழங்க முடியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பழய புல எண்.3208 க்கு புதிய் சர்வே எண்.273/17 மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பழய புல எண்.3208 யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து எதிருரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் அ.வ.எண்.906/1953 க்கும் இவ்வழக்கு பட்டிகை சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் அது எந்த ஆவணத்தின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியவில்லை. பி.வா.சா.ஆ.5 ல் அ.வ.எண்.906/1953 ல் வழக்கு பட்டிகை சொத்தில் பழய சர்வே எண். 3208 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ல் பத்தி 8 ல் 87 சென்ட் இடம் ரதவீதிக்கு என்றும் பாதைக்கும் இடப்பட்டுள்ளதாகவும் பட்டா நாராயணசுவாமிபதி பெயரில் மாற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.273/17 ரதவீதி என்றால் சரிதான். கோவிலின் ரதம் மேற்படி சர்வே எண்ணை சுற்றிதான் வரும் என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**